பதிப்புரிமை ஆசிரியருக்கே [All Rights to Author]

தமிழ்வழி பரீட்சைகள் 22 T I, II

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) முதலாம் தவணைப் பரீட்சை
General Cerificate of Education (Ord. Level) First Term Examination

தமிழ் மொழியும் இலக்கியமும் I, II
Tamil Language and Literature I, II

ஆசிரியர்: திரு.ஏ.கஜன் B.A Tamil (R)
077 2400 707 / 076 8044 959

மூன்று மணித்தியாலம்
*Three hours*

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப் பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும், விடையெழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண்:..................................................

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

**கவனிக்க:**
(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **(1), (2), (3), (4)** என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
(iv) அவ் விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

**1.** “தேயிலைச் செடியின் அடியிற் புதைந்த அப்பனின் சிதைமேல் ஏழை மகனும்” - இங்கு **அப்பன்** என்பதன் எதிர்ப்பாற் சொல்.
(1) அம்மா (2) அம்மணி (3) அம்மை (4) ஐயை

**2.** “கதியிழக்கினும் கட்டுரை யிழக்கிலோ மென்றான்” - இங்கு **கதி** என்பதன் எதிர்க்கருத்து.
(1) பரகதி (2) கடுகதி (3) நிர்க்கதி (4) அகதி

**3.** “உழவன் வயல் நோக்கி எருதுகளுடன் புறப்பட்டான்” - இங்கு **உழவன்** என்பதன் பெண்பாற் சொல்.
(1) உலத்தி (2) உழவி (3) உளத்தி (4) உழத்தி

**4.** “கயிரவமும் தாமரையும் கமழ் பழனக் குருநாட்டில் கலந்து வாழ” - இங்கு **பழனம்** என்பதன் ஒத்தசொல்.
(1) வயல் (2) பொய்கை (3) சேறு (4) அருவி

**5.** “என்னுடைய அண்ணனுக்கு எங்கோ ஓரிடத்தில் கலியாணம் பேசி முடித்துவிட்டாள் அம்மாள்” - இங்கு **கலியாணம்** என்பதற்கு நிகராக **வழங்கமுடியாத** ஒரு சொல்.
(1) விவகாரம் (2) விவாகம் (3) திருமணம் (4) மணம்

**6.** பின்வருவனவற்றுள் ஒலியைக் குறிக்கும் மரபுச் சொற்களில் **பொருத்தமற்றது.**
(1) யானை - பிளிறும் (2) எருது - கனைக்கும்
(3) பன்றி - உறுமும் (4) பசு - கதறும்

**7.** “இப்பொழுது இங்கு கிளைமேற் (Climate) சரியில்லை” - இங்கு **கிளைமேற்** என்ற கலைச்சொல்லுக்கான **தமிழ்ப்பதம்.**
(1) வானிலை (2) காலநிலை (3) பருவகாலம் (4) வெப்பநிலை

**8.** “கிராமத்தவரின் ஜீவனோபாயத் தொழிலாக விவசாயம் விளங்குகின்றது” - இதில் **ஜீவனோபாயம்** என்பது.
(1) அத்தியாவசியம் (2) வாழ்வாதாரம் (3) பொழுதுபோக்கு (4) கூட்டுமுயற்சி


[பக். 2 ஐப் பார்க்க

**9.** **பொருத்தமற்ற** சொற்களின் இணைப்பு.
(1) செய்யுள் - அடி (2) கட்டுரை – பந்தி (3) சொல் - எழுத்து (4) எழுத்து–நிறுத்தற்குறி

**10.** “ஏன் மேனே, நீ உன்ர மச்சாளிடம் பேசிறதில்லையாம்” - இங்கு **மேனே** என்ற பேச்சுத் தமிழை அதிகளவில் உபயோகிக்கும் மக்கள் சமூகம் வாழும் **பகுதி.**
(1) வடக்கு (2) தென்னிலங்கை (3) கிழக்கு (4) மலையகம்

**11.** ஈகைக் குணத்தை வலியுறுத்தப் **பொருத்தமான** பழமொழி.
(1) இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
(2) கெட்டாலும் செட்டி; கிழிந்தாலும் பட்டு.
(3) இட்டுக்கெட்டார் எங்குமில்லை.
(4) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.

**12.** “வெளிப்படையாகக் கேட்டல்” எனும் **பொருள்தரும்** மரபுத்தொடர்.
(1) வாய் காட்டுதல் (2) வாய் திறத்தல் (3) வாய் விடுதல் (4) வாய் மூத்தல்

**13.** மகனை இழந்த தாய் மனமுருகுவதற்குப் **பொருத்தமான** உவமைத்தொடர்.
(1) அகலாது அணுகாது தீய்க்காய்வார் போல.
(2) ஏறாமடைக்கு நீர் பாய்ச்சினாற் போல.
(3) அக்கினியிற்பட்ட மெழுகு போல.
(4) வலையிற் சிக்கிய மான் போல.

**14.** “ஓடுமீன் ஓட உறுமீன் வரும்வரை” - இங்கு இடம்பெறும் **உறு** என்பது.
(1) பெயர்ப் பகுபதம் (2) உரிப் பகுபதம் (3) வினைப் பகுபதம் (4) உரிப் பகாப்பதம்

**15.** வேறுபட்ட புணர்ச்சியைக் **கொண்டமைந்த** சொல்.
(1) மரப்பட்டை (2) மரத்தொட்டில் (3) மனவேதனை (4) குளக்கரை

**16.** உடனிலை மெய்ம்மயக்கம் **இடம்பெற்ற** சொல்.
(1) அன்று (2) அல்லி (3) அம்பு (4) அன்பு

**17.** “ஜனாதிபதியின் வருகையின் பொருட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது” - இங்கு இடம்பெறும் **சொல்லுருபு** எத்தனையாம் வேற்றுமைக்குரியதாகும்?
(1) 2 ஆம் வேற்றுமை (2) 1 ஆம் வேற்றுமை
(3) 4 ஆம் வேற்றுமை (4) 3 ஆம் வேற்றுமை

**18.** பின்வருவனவற்றுள் **எதிர்ப்பொருள்** குறிக்கும் **இரு** சொற்களால் இணைந்து வரும் **இணைமொழி.**
(1) ஆதியந்தம் (2) ஒட்டியுலர்ந்து
(3) கொஞ்சிக்குலாவி (4) கள்ளங்கபடம்

**19.** பின்வருவனவற்றுள் **‘ப’கரம் (ப்)** வேறுபட்டு ஒலிக்கும் சொல்.
(1) நாம்பன் (2) ஆம்பல் (3) கோபம் (4) சம்பல்

**20.** வினைச் சொல்லொன்றில் காலம்காட்டும் உறுப்பாக **தொழிற்படுவது.**
(1) இடைநிலை (2) சந்தி (3) விகாரம் (4) சாரியை

**21.** நான் அவரை எதிர்த்துப் பேசவில்லை
அவரது பேச்சில் நியாயமிருந்தது - மேற்படி இரு வாக்கியங்களையும் **இதே ஒழுங்கில்** தர்க்க ரீதியில் இணைப்பதற்கு **மிகப் பொருத்தமான** இணைப்பிடைச்சொல்.
(1) ஆகையால் (2) ஏனெனில் (3) ஆனாலும் (4) எனவே

**22.** செத்தான், கண்டான், கொன்றான், செய்வித்தான் ஆகிய வினைச்சொற்களின் பகுதிகளைச் **சரியாகக்** கொண்ட தொகுதி.
(1) செத்து, கண், கொன், செய் (2) சா, கண்டு, கொல், செய்வி
(1) சா, காண், கொன்று, செய்வி (4) சா, காண், கொல், செய்வி

**23.** ‘நாடு ஓங்கட்டும்’ - இதில் வரும் **‘ஓங்கட்டும்’** என்பது.
(1) குறிப்புவினை (2) ஏவல்வினை
(3) எதிர்மறைவினை (4) வியங்கோள்வினை



ஏ.கஜன் - தமிழ் வழிப் பரீட்சைகள் - ஏ.கஜன்

**24.** பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வாக்கியமாக **அமைவது.**
(1) அவன் பாடங்களைக் கவனமாகப் படித்தான்.
(2) அவன் படிப்பதற்காக என்னுடைய புத்தகத்தை எடுத்தான்.
(3) அவன் வாகனத்தில் ஏறி விரைந்து சென்றான்.
(4) நல்ல நூல்களைப் படிப்பது மனநிறைவு தருகின்றது.

**25.** "மெல்லெனப் பாயும் அருவி
கல்லையும் ஊடுருவிப் பாயும்" - இங்கு இரு தடவைகள் இடம்பெற்றுள்ள **'பாயும்'** என்ற சொல், **முறையே.**
(1) வினையெச்சம், வினைமுற்று (2) பெயரெச்சம், வினைமுற்று
(3) வினைமுற்று, வினையெச்சம் (4) வினைமுற்று, பெயரெச்சம்

**26.** வேற்றுமைப் பொருளால் **வேறுபட்டமையும்** தொடர்.
(1) என் புத்தகம் (2) எனது நண்பன் (3) மரவேர் (4) மேற்கு வீதி

**27.** பின்வருவனவற்றுள் உயர்திணையில் ஒரு பாலுக்கு **மாத்திரம்** உரித்தான சொல்.
(1) கூத்தாட்டி (2) பிரதிவாதி (3) மூதாட்டி (4) விருந்தாளி

**28.** பின்வருவனவற்றுள் தோன்றல் விகாரம் **இடம்பெற்ற** சொல்.
(1) கல்லால் (2) வாசலால் (3) கதவால் (4) நாக்கால்

- **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெறும் சொற்றொகுதியைத் தெரிவு செய்க.**

**29.** (1) பண்புத்தொகை - பைந்தமிழ், செந்தமிழ்
(2) வினைத்தொகை - மலர்விழி, வேல்விழி
(3) உவமைத்தொகை - மலர்விழி, கயல்விழி
(4) உம்மைத்தொகை - உயிர் மெய், காலை மாலை

**30.** (1) வினைமுற்று - படித்தான், வந்தான், சென்றான்
(2) ஏவல்வினை - படி, போ, செல்
(3) வியங்கோள் வினை - வாழ்க, தருக, வாழிய
(4) பிறவினை - படிப்பித்தான், எழுதினான், வருவித்தான்

- **புள்ளிக் கோடிடப்பட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.**

**31.** பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பாளர் ........................... தாக்கல் செய்தார்.
(1) வேட்புமனு (2) விஞ்ஞாபனம்
(3) விண்ணப்பம் (4) பிரசுரம்

**32.** அரசின் நிதி தொடர்பான விடயங்களைச் செயற்படுத்துவது ......................... ஆகும்.
(1) நிதியமைச்சு (2) திறைசேரி
(3) சுங்கவரித் திணைக்களம் (4) கணக்காய்வாளர் திணைக்களம்

**33.** வரவு செலவுத் திட்டத்தில் .......................... ஈடுசெய்வதற்காக அரசு வெளிநாட்டுக் கடனுதவிகளை நாடியது.
(1) பற்றாக்குறையை (2) மேலதிக செலவை
(3) துண்டுவிழும் தொகையை (4) கொடுப்பனவுகளை

**34.** விபத்தால் ஏற்படக்கூடிய இழப்பை நிவர்த்திப்பதற்கு தனிநபரோ நிறுவனமோ முற்கூட்டியே செய்வது...........................
(1) சேமிப்பு (2) முதலீடு (3) காப்புறுதி (4) மானியம்

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

**35.** இயற்கை அனர்த்தம் தொடர்பான முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட குழு அண்மையிற் கூடி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவதென்று,
(1) முடிவெடுத்தனர். (2) முடிவெடுத்தது.
(3) முடிவை எடுத்தது. (4) முடிவெடுத்தார்கள்.

ஏ.கஜன் - தமிழ் வள பரீட்சைகள் - ஏ.கஜன்

**36.** அயராது முயற்சி செய்பவர்களாலேயே வாழ்க்கையில் முன்னேற்றம்,
(1) காண்பார்கள். (2) காணமுடியும்.
(3) காணமுடியாது. (4) கண்டார்கள்.

- **கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

“கானெலாம் மலர்ந்த முல்லை
ககனமீ தெழுந்ததென்ன
வானெலாம் வயங்கு தாரை
நிரை நிரை மலர்ந்து தோன்ற
வேனிலான் விழவின் வைத்த
வெள்ளிவெண் கும்பமென்னத்
தூநிலா மதியம் வந்து
குணதிசை தோன்றிற்றம்மா”

**37.** இப் பாடலில் வர்ணிக்கப்படுவது.
(1) காலைக்காட்சி (2) சந்திரோதயக் காட்சி
(3) கானகக் காட்சி (4) சூரியோதயக் காட்சி

**38.** இப் பாடலில் உவமானங்களாகக் கையாளப்பட்டவை.
(1) முல்லை, கும்பம் (2) தாரை, மதியம்
(3) முல்லை, தாரை (4) கும்பம், மதியம்

**39.** “தூநிலா மதியம் வந்து குணதிசை தோன்றிற்றம்மா” - இங்கு, **குணதிசை** என்பது
(1) வடக்கு (2) தெற்கு (3) கிழக்கு (4) மேற்கு

**40.** கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்குப் **பொருத்தமான** வைப்பு முறையைத் தெரிவுசெய்க.
(அ) கண்ணனும் குசேலரும் சாந்தீப முனிவரிடம் சென்று கற்றமை அதற்குச் சான்று.
(ஆ) துரியோதனர்களுக்கு வந்து கற்பிக்க துரோணர் உடன்பட்டார்.
(இ) ஆனால், இதே காலத்தில் பிழையான வழக்கமும் ஆரம்பமாகிவிட்டது.
(ஈ) யாருக்குக் கற்பிப்பது என்ற நிலையும் தளர்ந்தது.
(உ) மாகாபாரத காலத்தில் மாணவர்கள் ஆசிரியரைத் தேடிச் சென்று கற்றனர்.
(1) ஆ, உ, இ, ஈ, அ (2) உ, ஆ, இ, அ, ஈ
(3) உ, அ, இ, ஆ, ஈ (4) உ, அ, இ, ஈ, ஆ

**(40 புள்ளிகள்)**

ஏ.கஜன் - தமிழ் மொழி பட்டைகள் - ஏ.கஜன்

* * *

தமிழ்வழி பரீட்சைகள் 22 T I, II

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) முதலாம் தவணைப் பரீட்சை
General Cerificate of Education (Ord. Level) First Term Examination

தமிழ் மொழியும் இலக்கியமும் I, II
Tamil Language and Literature I, II

ஆசிரியர்: திரு.ஏ.கஜன் B.A Tamil (R)
077 2400 707 / 076 8044 959

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

**கவனிக்க:**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
- இவ் வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

**1. சுருக்கமான விடை எழுதுக.**

(i) பின்வரும் தொடரைச் **சந்திபிரித்து** எழுதுக.
அங்கழியும்தான் தனதென்ற சிறுவட்டம்

(ii) பின்வருவனவற்றுள் கட்டுரையொன்றில் தவிர்க்கப்படவேண்டிய விடயங்களை **மாத்திரம்** தெரிந்தெடுக்குக.
கூறியது கூறல் நவின்றோர்க்கினிமை
நன்மொழி புணர்தல் குன்றக் கூறல்

(iii) "நாற்பது வயதைக் கடந்த அந்த வீட்டின் பெண்மணி கூண்டினைத் தொட்டுப் பார்த்தாள்" – மேற்படி வாக்கியத்திலுள்ள **மயக்கத்தை** இனங்கண்டு திருத்தி எழுதுக.

(iv) சால / விலகி / சிறப்புடையது / நட்புமின்றி / தீயவர்களிடம் / இருப்பதுவே / பகையுமின்றி – மேலே ஒழுங்குமாறியுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள வாக்கியமாக எழுதிக்காட்டுக.

(v) பின்வரும் பேச்சுநிலைத் தொடரை எழுத்துநிலைத் தொடராக எழுதிக்காட்டுக.
"ஐயா சாப்பிட்டு முடிஞ்சு ஆறுதலா இருக்கேக்க கேட்கவேணும்"

(vi) பின்வரும் வாக்கியத்தின் எழுவாய் **மற்றும்** பயனிலை என்பவற்றைக் குறிப்பிடுக.
"புலவரின் சந்ததியார் கல்லாதவராயின் ஓலைச்சுவடிகள் பரண்மீதேறும்"

(vii) "கயல்விழி ஓர் எழுதுவினைஞரைக் கைப்பிடித்தாள்"
(அ) 'எழுதுவினைஞர்' என்பதற்குப் பதிலாக தமிழில் வழங்கப்படும் **பிறிதொரு** சொல்லைப் பெயரிடுக.
(அ) 'கைப்பிடித்தல்' என்ற மரபுத்தொடரின் **பொருள்** யாது?

(viii) பின்வரும் வாக்கியங்களை இணைத்து ஒரு வாக்கியமாக்குக.
- சீதா கடைக்குச் சென்றாள்.
- சீதா கடையில் பொருட்களை வாங்கினாள்.
- சீதா வீட்டுக்குத் திரும்பினாள்.

(ix) பின்வருவனவற்றுள் எமது கருத்துக்களைப் பிறருக்கு வெளிப்படுத்த உதவும் **இரண்டு** திறன்கள் எவை?
பேச்சு, எழுத்து, வாசிப்பு, கேட்டல்

(x) "வெட்டி எறிந்த நகம் போல மூன்றாம் பிறை" – மேற்படி தொடரில் இடம்பெற்றுள்ள **அணி**யைக் குறிப்பிட்டு விளக்குக.

**(20 புள்ளிகள்)**

தமிழ் வழிப் பரீட்சைகள் - ஏ.கஜன்

**2. பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாள 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

(அ) தொற்றுநோய்கள் என்பது இன்றைய உலகையே ஆட்டிப்போடும் ஒன்றாக மாறியிருக்கின்றது. காலத்திற்கு காலம் பல்வேறுபட்ட வைரஸ் தொற்றுக்களால் இந்த உலகம் பாரியளவான அழிவுகளைச் சந்தித்துக்கொண்ட நிலையில், அண்மையில் கொரோணா எனப்படும் **COVID – 19** எனும் வைரஸ் தாக்கத்தினால் உலக மக்கள் பலர் பாதிப்புற்றும், பலர் உயிரிழந்து கொண்டிருக்கின்றமையும் அறியாததொன்றல்ல. எமது பாரம்பரிய பழக்கவழக்கங்கள், சுய மற்றும் சூழல் சுத்தம், என்பவற்றைப் பேணுவதன் மூலம் இவ்வாறான வைரஸ் தொற்றுக்களிலிருந்து எம்மை நாம் விடுவித்துக் கொள்ளவியலும் என விஞ்ஞானிகள் எடுத்துக்கூறி வருகின்றனர். இதனை விளக்கும் வகையிலமைந்த ஓர் **விளக்கக் கட்டுரை.**

(ஆ) பொருளாதார அபிவிருத்தியில் கிராமியக் கைத்தொழில்களுக்கு முக்கியமானதொரு பங்குண்டு. கிராமியக் கைத்தொழில்கள் பல நுணுக்கமான உத்திகள் மூலமாக பல படிகள் முன்னேற்றம் கண்டுள்ளன. இக் கிராமியக் கைத்தொழில்களின் முக்கியத்துவம், பாரம்பரியத்தின் பிரதிபலிப்பு, அவற்றின் நன்மைகளும், தீமைகளும் பற்றி நண்பர்கள் இருவருக்கிடையில் இடம்பெறும் **உரையாடல்.**

(இ) வாசிப்பு என்பது தற்காலத்தில் அருகிவரும் ஒரு பழக்கமாக மாறிவிட்டது. பண்டைய காலத்தில் வாசிப்பு என்பது முக்கியத்துவம் பெற்று விளங்கிய போதிலும், தற்கால சமுதாயமானது வாசிப்பை புறந்தள்ளிவைக்கின்றது. ஒரு மனிதனை பூரணப்படுத்துவது வாசிப்பு என்பதை நாம் அறியாது, தேவையற்ற விடயங்களில் எமது கவனங்களை செலுத்தி தவறான பாதையில் எம்மை நாமே வழிநடத்திச் செல்கின்றோம். இதனை விளக்கும் வகையில் வாசிப்பு வார நிகழ்வில் பாடசாலையில் நீர் நிகழ்த்திய **சொற்பொழிவு.**

(ஈ) ‘ரஞ்சனி வறிய பெற்றோரின் ஒரேயொரு பிள்ளை. கல்வியில் அவளுக்கிருந்த ஆற்றலை அறிந்த பெற்றோர், தமது வறுமை நிலையிலும் அவளை முன்னேற்ற வேண்டும் என்ற ஆசையால், நகர்ப்புறப் பாடசாலையொன்றில் அவளைச் சேர்த்தார்கள். அங்கு அவள் சக மாணவர்களால் ஒதுக்கப்படுகின்றாள். ஆனாலும், அவள் அதனையெல்லாம் பொருட்படுத்தாது நன்கு கற்று வாழ்வில் உயர்நிலை அடைகிறாள்’ என்பதைக் கருவாகக் கொண்ட ஒரு சிறுகதை.

**(25** புள்ளிகள்**)**

**3. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)**

எந்தவொரு கலையோ இலக்கியமோ உண்மையாகச் செழித்துவளர வேண்டுமாயின், அது பேரியக்கமொன்றின் அம்சமாக இருத்தல் அவசியம். நாட்டுப்பாடல் வளர்ச்சியும் இவ்விதிக்கு விலக்கன்று. உழைக்கும் மக்களின் இலக்கியம் நாட்டுப்பாடல்களாம். பல்வேறு காலமாக சமூகத்தில் நசுக்கப்பட்டு வந்த துன்பங்களைச் சித்திரிக்கும் பாடல்களின் அடிநாதமாக அவர்களது கண்ணோட்டம் அமைந்துள்ளது. அது நம்பிக்கையோடு எதிர்காலத்தை நோக்கும் கண்ணோட்டமாகும். அந்தக் கண்ணோட்டத்தை ஆதாரமாகக் கொண்டு எமது காலத்து சமூக இயக்கங்களில் நாட்டுப்பாடல் முதலியவற்றை கலந்தால் நிச்சயம் அவை புதிய வாழ்வு பெறும். ஆனால், அவ்வாறு செய்தால் அதன் “தூய்மை” கெட்டுவிடும் எனச் சிலர் பிரலாபிப்பர்.

எனினும், இன்று இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலே ***Folk Song*** **–** நாட்டுப்பாடல் இயக்கம் மிகவும் செழித்து வளரக் காண்கின்றோம். முன் எப்பொழுதுமில்லாத அளவு பாடல்கள் இயற்றப்படுகின்றன. கச்சேரிகளிலும், அரங்குகளிலும் கலைஞர்கள் புதிய புதிய நாட்டுப்பாடல்களைப் பாடி பல்லாயிரக்கணக்கான மக்களைப் பரவசத்திலாழ்த்தி வருகின்றனர். அதன் இரகசியம் என்ன? வேறொன்றுமில்லை. அணு ஆயுத எதிர்ப்பு, சமாதானக் கோரிக்கை, அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு, பலவிதமான உரிமைப் போராட்டம் முதலிய இயக்கங்களில் ஈடுபட்டுழைக்கும் ஆயிரக்கணக்கான இளைஞரும், பிறரும் தமக்கு பொழுதுபோக்காகவும், தமது கருத்துக்களைப் பிறருக்கு எடுத்துரைக்கும் முகமாகவும் நாடோடிப்பாடல் மெட்டுக்களில் புதிய உள்ளடக்கத்தைப் பெய்கின்றனர். அதிலே ஆத்ம திருப்தியும் அடைகின்றனர். பழைய மெட்டுக்கள் ஏற்கனவே மக்கள் நெஞ்சில் நிலைத்திருப்பனவாகையால், விரைவில் புதிய பாடல்கள் யாவராலும் பாடப்பெறுகின்றன. பழைய சாடியில் புதிய மது வார்க்கப்படுகின்றது. இரண்டும் சிறப்புப் பெறுகின்றன. இதிலொன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**(10** புள்ளிகள்**)**

ஏ.கஜன் -தமிழ் வழி பரீட்சைகள்- ஏ.கஜன்



[பக். 7 ஐப் பார்க்க

**4. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரண வாக்கியங்களில் விடை எழுதுக.**

இலக்கியங்கள் மெத்த வளருகிற மேல்நாட்டில் அந்நாட்டுத் திறனாய்வாளர் அவ்விலக்கியங்களை இரு வகைகளாகப் பிரிப்பர். இன்பம் தரும் இலக்கியம் என்றும், பயன்தரும் இலக்கியம் என்றும் இருவகைப்படுத்துவர். ஆனால், நம்முடைய நாட்டைப் பொறுத்தமட்டில், இன்பம் தரும் ஒரே குறிக்கோளுக்காக இலக்கியம் ஆக்கப்படுவதில்லை. வாழ்க்கைக்கு பயன்படுவதே இலக்கியத்தின் முக்கிய குறிக்கோளாகும். நீதி நூல்களும் வாழ்க்கைக்கு பயன்படுகின்றன என்றாலும், நீதி நூல்களிலிருந்து இலக்கியம் மாறுபடுகின்ற இடம் ஒன்று உண்டு. நீதிநூல் திருத்துகின்ற ஆசானைப்போல் நேரிடையாக அறிவுரை வழங்கும். அதனைக் கேட்பவர் இன்பம் பெறும் நோக்கம் கொண்டவராக இருப்பின் நீதிநூல் அவரிடம் செல்லாது. இலக்கியமோவெனில் வாழ்க்கைக்குத் தேவையான அறிவுரைகளை வழங்குவதெனினும், அது ஆசான் வேலையைச் செய்கின்றது என்று கண்டுகொள்ள முடியாமலேயே அதனைச் செய்துவிடுகின்றது. இலக்கிய இன்பம், சர்க்கரை தடவிய மாத்திரை போல் கற்போர் உட்புகுந்து நற்பயனை விளைவிக்கின்றது.

(அ) மேனாட்டுத் திறனாய்வாளர்கள் இலக்கியத்தை எவ்விதம் வகைப்படுத்துகின்றார்கள்?
(ஆ) நம்முடைய நாட்டில் இலக்கியம் படைக்கப்படுவதன் பிரதான நோக்கம் யாது?
(இ) ''நீதி நூல்கள் இலக்கிய வகையொன்றினைச் சார்ந்தனவாகும்'' - இக் கூற்று மேற்படி பந்தியின் ஆசிரியருக்கு உடன்பாடானதா? காரணம் தருக.
(ஈ) இலக்கியங்கள் மக்களுக்கான அறிவுரைகளை எவ்வாறு வழங்குகின்றன?
(உ) ''சர்க்கரை தடவிய மாத்திரை'' என்ற உவமை மூலம் நம் நாட்டின் இலக்கியத்தின் தன்மை எவ்வாறு உணர்த்தப்படுகின்றது?

**(10 புள்ளிகள்)**

**5.** ஐக்கிய நாடுகள் தாபனமானது, ஒக்டோபர் பதினைந்தாம் திகதியை ''உலக கைகழுவுதல் தினம்'' எனப் பிரகடனப்படுத்தியுள்ளது. சவர்க்காரத்தைப் பயன்படுத்திக் கை கழுவும் பழக்கத்தை உலகளாவிய ரீதியில் ஊக்குவிப்பதே இத் தினத்தின் நோக்கமாகும். சவர்க்காரத்தைப் பயன்படுத்திக் கைகழுவும் பழக்கம் என்பது எமது ஆரோக்கிய வாழ்விற்கு இன்றியமையாதது என்பதை வலியுறுத்திப் பத்திரிகைக்கு **100** சொற்களில் ஒரு **கடிதம்.**

**அல்லது**

பிரதேச சுகாதார உத்தியோகத்தராகிய நீர், உமது பணிக்குட்பட்ட கிராமத்தில் ஏற்பட்டுள்ள திடீர் தொற்றுநோய்த் தாக்கத்தின் உண்மை நிலவரத்தையும், இது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய அவசர நடவடிக்கைகளையும் முன்வைத்து, உமது மேலதிகாரிக்கு **100** சொற்களில் ஒரு **அறிக்கை.**

**(15 புள்ளிகள்)**

ஏ.கஜன் - தமிழ் வெளி பரீட்சைகள் - ஏ.கஜன்

* * *